REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 30உ புதன் (12—6—57) ★ வெளியூர்: வைகாசி 31உ வியாழன் (13—6—57) [இதழ் 311

7-இலட்சம் பேர் வேலைகோரியுள்ளனர்

புதுடில்லி, ஜுன் 12—

கடந்த மார்ச் திங்களில் 7,47,341 பேர்கள் வேலை தேடித் தரும் நிறுவனங்களில் வேலைக்காக மனுச் செய்திருந்தனர் என்றும், ஏப்ரல் திங்கள் இறுதியில் இந்தத் தொகை 7,53,537 ஆக உயர்ந்தது என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் இறுதியில் சுமார் 5,827 பேர் தங்களிடம் 27,469 வேலைகள் காலியிருப்பதாகத் தெரிவித்து வேலை தேடித் தரும் நிறுவனங்களின் உதவியை நாடினர் என்றும், இது மார்ச் திங்களில் முறையே 5,126 ஆகவும், 22,646 ஆகவும் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நெப்போலியன் பாதையில் செல்கிறார் நேரு!

திட்டத்தின் பெயரால் ஏழைகளை வாட்டுவது நியாயமல்ல

சென்னைக் கூட்டத்தில் அண்ணா கண்டன முழக்கம்

"திட்டங்களென்பது மேலேயிருந்து கீழே வரக் கூடாது; கீழேயிருந்து மேலேபோக வேண்டும். நமக்கு என்ன திட்டம் வேண்டும் என்பதை நாம்அறிந்துதான் சொல்லவேண்டுமே தவிர; அவர்கள் பார்த்து சொல்லக்கூடாது.

"டெல்லி திட்டம் தீட்டுகின்றது; தென்னாட்டிலே அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லுகின்றார்கள். ஆனால் தென்னாட்டுக்கு என்ன திட்டம் தேவையென்பது டெல்லிக்குத் தெரியாது; ஏன் டெல்லிக்குத் தெரியாது? டெல்லிக்கும் தென்னாட்டுக்கும் 1000-மேல் வித்தியாசம் இருக்கிறது. இங்கே யிருக்கின்ற நிலைமைகள் அங்கே யிருப்பவர்களுக்குத் தெரியாது; அங்கே யிருக்கிற நிலைமைகள் இங்கே யிருக்கிற நமக்கும் புரியாது. ஆகையினால் தான், திட்டமென்பதை மறுபடியும் அப்படியே நடத்த வேண்டுமென்றாலும், தென்னாட்டிலே உள்ள மாநிலங்கள்—தென்னாட்டிலே உள்ள மாநிலங்களான கேரளம், கன்னடம், ஆந்திரம், தமிழகம் ஆகிய அரசுத் தலைவர்களெல்லாம் ஒன்றுககூடி ஆலோசனைசெய்து, 'இப்படியெல்லாம் திட்டங்கள் தேவை' என்று தீட்டி அந்தத் திட்டங்களை, டெல்லி பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டு, அதற்குரிய பணத்தை இவர்கள் கையிலே கொடுத்து, 'நீங்கள் இதற்கு ஏற்றபடி காரியமாற்ற வேண்டும்' என்று சொன்னால், திட்டத்திலே கொஞ்சம் பலன் கிடைக்கும்.

"ஆனால், திட்டத்தினுடைய பெயரைச் சொல்லி ஏழை மக்களை வாட்டுவதும், தாங்க முடியாத அளவுக்கு அவர்கள்மீது வரிகளை விதிப்பதும் நல்லதல்ல என்ற அளவிலே நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும்—அவர்களாலே நடத்தப்படும் இந்த சர்க்காருக்கும் நாம் எச்சரிக்கை விடுக்கின்றோம்."

—இவ்வாறு அண்ணா அவர்கள் 10—6—57 மாலை சென்னை 38-வது வட்ட தி. மு. கழக முதலாண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது கருத்துரையின் முதல் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

"புதிய வரி விதிப்புத் திட்டத்தைக் குறைத்துக்கொள்ள நேருவே முன்வருவாரா என்றால், வரமாட்டார்; ஏன் வரமாட்டார் என்றால், நெப்போலியன் வந்தானா? வரவில்லை.

"நெப்போலியன் பிரெஞ்சு நாட்டிலே பெரிய தலைவனாகி—பிரெஞ்சு நாட்டிற்கே பெரிய சக்கரவர்த்தியாகி — ஐரோப்பா கண்டத்திலேயுள்ள பல நாடுகளை எல்லாம் தன்னுடைய நெறித்த புருவத்தாலேயே கைப்பற்றினான்; கடைசியிலே மிச்சமிருந்தது ரஷ்யா ஒன்றுதான்; 'ரஷ்யா மீதும் படையெடுக்க வேண்டும்' என்றான். அவனுடைய தளபதிகள் அவனுக்குச் சொன்னார்கள் — 'ரஷ்யாமீது படையெடுக்கலாம்; வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இது மாரிகாலம் — பனி பெய்கின்ற காலம்; இந்தக் காலத்திலே கூடாது' என்றார்கள். உடனே நெப்போலியன், 'மாரியும்-கோடையும் உங்களுக்குத்தான்—எனக்கல்ல' என்றான். அவர்கள், நீங்கள் மட்டும் ரஷ்யா மீது படையெடுப்பதானால் மாரியுமில்லை—கோடையுமில்லை; ஆனால் சாதாரண மக்களல்லவா 'சோல்ஜர்'களாக இருக்கின்றார்கள்; இவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டுபோய் ரஷ்யாவை இந்த காலத்திலே பிடிப்பதென்றால் முடியாது. இது மாரிக்காலம்; மாரிக்காலத்திலே ரஷ்யாவிலே கடும் பனி பெய்யும்; பெரிய பெரிய பனிக்கட்டிகள் விழுந்து பாதைகள் அடைபட்டுப் போகும். இந்த நேரத்திலே நம்முடைய பட்டாளம் அங்கே போனால், பசியினாலும்—பட்டினியாலும் தாக்கப்படும்; பாதைகளெல்லாம் கண்களுக்குத் தெரியாது; பயங்கரமான பள்ளங்களெல்லாம் பனியினாலே மூடப்பட்டிருக்கும்; அது சாதாரணப் பாதையென்று உள்ளே போனால் படுபாதாளத்தில் படைகளெல்லாம் விழுந்து விடும்,' என்று எவ்வளவோ புத்திமதி சொன்னார்கள். ஆனால், நெப்போலியனோ, நெறித்த புருவத்தோடு கேட்டான்-'பிரெஞ்சு நாட்டிற்கு நான் தலைவனா? நீங்கள் தலைவர்களா?'—என்று!

"'நீங்கள்தான் தலைவர்' என்றார்கள். 'அப்படியானால் வாருங்கள்' என்று அழைத்தான்; அவர்களும் சென்றார்கள்.

"நீங்கள் வரலாற்றை படித்துப் பார்த்தால் தெரியும்—எவ்வளவு பேர் ரஷ்யாமீது படையெடுத்துச் சென்றார்களோ, அவர்களிலே பத்தில் ஒரு பாகத்தினர் மட்டுமே திரும்பி வந்தார்கள்; ரஷ்யாவைப் பிடித்து அல்ல—ரஷ்யாவிலிருந்து வெளியேறிவிட்டால் போதுமென்று ஓடிவந்தார்கள்— நெப்போலியன் வரலாற்றிலே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"நெப்போலியனைப் போலத்தான் பண்டித ஜவர்லால் நேருவும்! அவருக்குச் சென்றவிடமெல்லாம் கீர்த்தியும்-வெற்றியும் கிடைக்கிறது; அவரைப் பார்க்கின்றவர்கள் எல்லாம் புகழுகின்றார்கள்; அவர் செய்கின்றவற்றை இடித்துச் சொல்லுவதற்கு யாரும் பயப்படுகின்றார்கள்; அவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்து கீழே இறங்கிவிட்டால், வேறு யாரும் ஆட்சிப் பொறுப்பை இன்றைய தினம் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வலிவு பெற்றில்லை; அந்த நிலையை அடைந்துவிட்ட காரணத்தால், நெப்போலியனுக்கு ஏற்பட்டதைப்போல் நேரு பண்டிதருக்கு, 'தன்னாலே எதையும் சாதிக்க முடியும்—எதையும் சாதிக்கலாமென்பது தனக்குத் தெரியும் — தன்னை விட்டால் இவைகளை சாதிப்பதற்கு வேறு ஆட்களில்லை—தான் சாதிக்கா விட்டால் வேறு யாரும் சாதிக்க மாட்டார்கள்' என்று இவ்வளவு எண்ணங்களும் உள்ளே குடைகின்ற காரணத்தால்தான், நெப்போலியன் தனது படைகளை 'ரஷ்யாவுக்கு வாருங்கள்' என்று அழைத்ததைப்போல், நாட்டு மக்களை இன்றையத் தினம் நேரு, 'இரண்டாவது திட்டத்திற்கு வாருங்கள்! மூன்றாவது திட்டத்திற்குத் தயாராகுங்கள்!!' என்று அழைக்கின்றார்.

"என்னுடைய வருத்தம் கலந்த கண்டனத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன் — நேரு பண்டிதருடைய இந்த முயற்சியும் நெப்போலியனுடைய முயற்சியைப்போல் கடைசியிலே அவரே வருத்தப்படத்தக்க அளவுக்கு தோல்வியாக முடியுமே தவிர வெற்றியாக அது அமையாது.

"ஏனென்றால், எத்தனை கோடி திட்டத்திற்கு செலவழித்தாலும் — '100 ரூபாயை திட்டத்திலே போடு' என்று சர்க்கார் நமச்சிவாயத்தினிடத்திலே கொடுத்தால், அது நமச்சிவாயன் கையிலேயிருந்து நாராயணன் கைக்கு போகின்ற நேரத்திலே 100 ரூபாயில் 95 ரூபாய்தான் சேருகிறது. நாராயணன்கையிலேயிருக்கிற 95 ரூபாய் பக்கத்திலேயிருக்கிற கந்தசாமியிடம் கொடுக்கப்படும்போது 85 ரூபாயாகத்தான் மாறுகிறது; கடைசியிலே அத்தொகை ஏழையினுடைய கையிலே போய் சேரும்போது 8 ரூபாயாகத்தான் இருக்கும்; சர்க்கார் கொடுக்கிறது ரூ. 100 என்றால், அது ஏழையினுடைய கையிலே சேரும்போது 8 ரூபாய் தான் மிச்சப்படுகின்றது.

"ஐரோப்பிய நாட்டிலே 'பிரெட்ரிக்தி கிரேட்' என்ற மன்னன், 'ஏழை மக்களுக்கு எவ்வளவோ செய்கின்றேன்; ஆனால், எதும் கிடைக்கவில்லை—கிடைக்கவில்லையென்று வருத்தப்படுகிறார்களே! அது எப்படி?' என்று, ஒரு பெரிய விருந்து நடைபெறும்பொழுது தன்னுடைய பிரபுக்களையும், அமைச்சர்களையும் கேட்டானும்! அவர்களிலே வயது முதிர்ந்த அமைச்சர் ஒருவர், 'நான் இதற்குப் பதில் சொல்கிறேன்,' என்று சொல்லிவிட்டு, அவர் அதற்கு வார்த்தையாலே பதில் சொல்லவில்லையாம்! தனக்காக விருந்துக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு ஐஸ் கட்டியை எடுத்து பக்கத்திலிருக்கிறவரிடம் கொடுத்து, 'இதை அடுத்த பிரபுவிடம் கொடு,' என்றார்; அவர் அவரிடத்திலே கொடுத்தார்: அந்த பிரபு இன்னொருவரிடத்திலே கொடுத்தார். இன்னொரு பிரபு மற்றொரு பிரபுவிடம் கொடுத்து, இப்படி 50—60 கைகள் மாறி, கடைசியிலே மன்னர் கையிலே போய்ச் சேரும்போது, இரண்டு சொட்டுத் தண்ணீர் தான் மிச்சமிருந்ததாம்! ஏனென்றால், முதலிலே எடுத்தது ஐஸ் கட்டி! உடனே 'எங்கே ஐஸ் கட்டி,' என்று கேட்டாராம் மன்னர்!

"அதற்கு அமைச்சர், 'உங்களுக்குக் கிடைத்தது இரண்டு சொட்டுத் தண்ணீர்தான்; அது ஐஸ் கட்டியாகத்தான் புறப்பட்டது; இத்தனை தரகர்கள் நடுவே இருந்ததாலே கடைசியில் உங்களுக்கு இரண்டு சொட்டு தண்ணீர் தான் கிடைத்தது; அதைப் போலத்தான், நீங்கள் ஏழைகளுக்குத் தருகின்ற உதவி இடையிலே 50—60 தரகர்கள் கைகளுக்கு மாறுகின்ற காரணத்தால், கடைசியில் இரண்டு சொட்டுக் கண்ணீர்தான் அவர்களுக்கு மிச்சமாகிறது; உண்மையிலே நன்மை கிடைக்கவில்லை' என்று சொன்னாராம்!

"அதே முறையிலே எட்டிலே பார்த்தால், ரூ. 2,000 கோடி செலவழித்தாகி விட்டதாகக் கணக்கு காண்பிக்கும். ரூ. 2,000 கோடி முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவழித்தான பிறகும்கூட, இதோ—இங்கே காவல் காக்கும் போலீஸ்காரர்களுக்கு சம்பளத்தை உயர்த்த முடியவில்லை; நாமெல்லாம் ஏதாவது கிளர்ச்சியிலே ஈடுபட்டால் உள்ளே கொண்டுபோய்—ஜெயிலிலே கொண்டுபோய் அடைக்கிறார்கள்; அங்கே காவல் இருக்கிறார்களே 'வார்டர்கள்'—அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்த முடியவில்லை; கிராம 'முன்சீப்'களுக்கு சம்பளத்தை உயர்த்த முடியவில்லை; சர்க்கார் அலுவலர்களுக்கு சம்பளத்தை உயர்த்த முடியவில்லை. ஆனால் பணம் மட்டும் ரூ. 2,000 கோடி செலவாகிவிட்டது. காரணமென்ன?

"நான் சொன்ன 'பிரடெரிக்' கதையில் வருவதுபோல் - ஐஸ் கட்டியாக ஆரம்பிப்பது தரகர்கள் கைகள் பட்டு பட்டு கடைசியிலே இரண்டு சொட்டு தண்ணீர்மிஞ்சுவதுபோல்—இந்த ரூ. 2,000-கோடி ஆயிரத்தெட்டு 'காண்டிராக்டர்கள்' கையிலே பட்டுப் பட்டு, கடைசியிலே ஏழை மக்களுக்கு வருகின்றபொழுது 'எங்கே-எங்கே' என்று தேடக்கூடியதாக வருகின்றது.

கோவா செல்வதற்கு அடையாளச் சீட்டு!

கோவாவுக்குள் செல்வதற்கு கோவானியருக்குள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்த போர்ச்சுகீசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

இனி இந்தியப் பகுதியிலிருந்து பிரவேசிக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அடையாளச் சீட்டு வைத்திருக்க வேண்டுமாம். இந்த அடையாளச் சீட்டின் விற்பனை மூலம் ரூ. 40 இலட்சம் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறதாம். பயங்கரவாதிகளைத் தடுக்கவே கோவா இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாம்.

கல்விக்கூடங்கள்

ஜூலைக்குப் பின்னர் திறக்கப்படும்

சென்னை, ஜுன் 11—

சென்னை மாநிலத்தில் பரவியுள்ள 'இன்புளுயன்ஸா' விஷக் காய்ச்சல் முழுமையிலும் ஒழிக்கப்படாத காரணத்தினால், சென்னை மாநிலத்திலுள்ள பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் அனைத்தும் ஜூலை முதல் தேதிக்குப் பிறகே திறக்கப்பட வேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 6/57

கழகத் தோழர்களுக்கு

★

சென்னை நகரிலும், பிற மாவட்டங்களிலும் விஷக்காய்ச்சல் நோய் பெருவாரியாகப் பரவிப் பலரையும் பாதித்துக்கொண்டு வருவதால், இன்னும் ஒரு திங்களுக்கு, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் தவிர, மற்ற கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டாம் என்றும்; நோய் பரவவொட்டாமல் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

12—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—6—57 புதன்

இரத்தக் கண்ணீர்!

சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகள் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி, விலைகளை இறக்கி மக்களுக்கு உதவ பரிதாபகரமான முறையில் தவறிவிட்டிருக்கின்றன.

நியாயவிலைக் கடைகளுக்கு வெளி இடங்களில் விற்கும் அரிசியின் அநியாய விலை ஏற்றத்தை இறக்கும் ஆற்றல் இருக்கவில்லை.

தங்களது வடநாட்டு எஜமானர்களின் மூலம் சென்னை சர்க்கார், இந்த விலை ஏற்றத்தைத் தடுக்க என்று கூறி மேற்கொண்ட வேறு சில நடவடிக்கைகளும் பலன் தரவில்லை நடைமுறையில்.

ஏறிய விலைகள் ஒரு ஸ்திர நிலையை அடைய முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. ஏழை எளியோரின் வயிற்றிலும் வாயிலும் பேரடிகளைத் தந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சென்னை சர்க்கார் விலை ஏற்றத்திற்கான காரணங்களையும் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறி, பரிகாரமும் தேடியிருப்பதாக விளக்கினர்.

சென்னை மாநிலத்தில் உபரியாகக் கிடைக்கக்கூடிய அரிசி, நெற்களஞ்சியமான தஞ்சையிலிருந்து, பயங்கரமான அளவுக்குப் பற்றுக்குறை மாநிலமாயுள்ள கேரள மாநிலத்திற்கு ஏற்றுமதியாகிவிடுகிறது. மேலும் உபரி விளைச்சல் உள்ள ஆந்திரத்திலிருந்து தமிழகத்திற்குப் போதுமான அரிசி இறக்குமதியாவதில்லை. இந்த நிலையில் ஏற்கனவே பற்றுக்குறை நிலையில் உள்ள தமிழ்நாடு அவதியுறுகிறது. இது இரண்டும்தான், அதாவது கேரளத்திற்கு ஏற்றுமதியாவதும் ஆந்திரத்திலிருந்து போதுமான அளவு இறக்குமதியாவது இல்லை என்ற இரண்டு நிலைகளும்தான் தமிழகத்தில் உணவுப் பொருள் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்று சென்னை சர்க்கார் கூறியிருக்கிறது.

இதற்குப் பரிகாரமாக நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருப்பது என்ன?

"சென்னையுடன் மற்றொரு பற்றுக்குறை மாநிலமான மைசூர், மற்றும் உபரி விளைச்சல் உள்ள ஆந்திரம் இந்த மூன்று மாநிலங்களையும் கொண்ட மண்டலம் ஒன்றை உருவாக்க வேண்டும்; இந்த மண்டலத்திலிருந்து அரிசி ஏற்றுமதியை அனுமதிக்கக் கூடாது; அவ்வாறு செய்தால், மைசூர், சென்னை மாநிலங்களின் பற்றுக்குறையை ஆந்திரத்தின் உபரி சரிக்கட்டிவிடும்; ஒதுக்கப்படுகிற கேரள மாநிலத்தின் மிதமிஞ்சிய பற்றுக்குறையை மத்திய சர்க்காரே விசேடப் பொறுப்பெடுத்துக் கொண்டு சரிக்கட்டித் தர வேண்டும்' என்று யோசனை கூறியிருக்கிறார், சென்னை மந்திரி!

அரிசி விலை ஏற்றத்திற்கான காரணங்களையும், அந்தநிலை மாற்றத்திற்கான வழியையும் அவர் கண்டறிந்து கூறுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவைதான் என்றாலும், அவரது யோசனையை டெல்லி சர்க்காரின் உணவு மந்திரி ஏற்றுக் கொள்ளுமாறு செய்யமுடியாது போனது வருந்தற்குரியதே!

அரிசி விலை ஏற்றத்தினால் இந்த மாநில மக்கள்படுகிற அவதியை டெல்லி மந்திரி உணரும் வகையில், சென்னை சர்க்கார் எடுத்துரைத்ததாகத் தெரியவில்லை.

டெல்லி மந்திரி சென்னை சர்க்காரின் யோசனையை ஏற்காமற் போனதற்காகக் காட்டியுள்ள காரணம் வேடிக்கையானது என்பது மட்டுமல்ல— கேரள மாநிலத்தின் நலனில் மத்திய சர்க்காருக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகவும் உள்ளது என்று கருதவும் இடமுண்டு.

இந்த நிலைகளிலிருந்து, எது விளக்கமானாலும் இல்லாவிட்டாலும், உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்ற பேச்சு, வெறும் ஆதாரமற்ற—நடைமுறைக்குப் புறம்பான நிலைகளை அடிப்படையாகக் கொண்டது.

உணவு உற்பத்தி அதிகரிப்பு என்பது ஏட்டில் உள்ள புள்ளி விவரமே தவிர, நாட்டில் நிலவும் நிலையின் விளக்கமல்ல என்பது மட்டும் தெளிவாகிறது.

சென்னை சர்க்காரும் அவர்களது வடநாட்டு எசமானர்களும் யோசனைகளைக் கூறுவதும், மற்றவர் அதனை நிராகரிப்பதுமாகக் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதே நேரத்தில், விலை ஏற்றத்தால் ஏழை - எளிய மக்கள் சித்திரவதை பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்!

உணவுப் பிரச்சினை போன்ற ஜீவாதாரமான பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதில்கூட காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஆமை வேகத்தில் செல்கிறார்களே என்பதை எண்ணும் போது, நெஞ்சத்தை ஏழைகளுக்காக்கிக் கொண்டவர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்காமலிருக்கமுடியாது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு உதவி

கிராமாந்திரங்களின் நிலை என்ன?

புதுடில்லி, ஜூன் 10—

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் சம்பந்தமான பல்வேறு ஏற்பாடுகளுக்கும் இந்திய சர்க்கார் 1957 மே 15-ந்தேதியுடன் முடிந்த ஒரு மாத காலத்தில் மொத்தம் ரூ. 94,452 மானியம் வழங்கியிருக்கிறார்களாம்!

புதிய 'கிளினிக்'குகள் ஏற்படுத்துவது, ஏற்கனவேயுள்ள 'கிளினிக்'குகளைப் பராமரிப்பது, ஆராய்ச்சி வேலை முதலியவைகளுக்குள்ளாக இத்தொகை வழங்கப்பட்டிருக்கிறதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000 கிராமாந்திர 'கிளினிக்'குகளும், 500 நகர 'கிளினிக்'குகளும் கட்டம் கட்டமாக ஏற்படுத்தப்படுமாம்.

அமெரிக்க அரசியலில் ராக்பெல்லர் குடும்பம்

ரஷ்ய கம்யூனிஸ்டு இளைஞர் பத்திரிகையின் வர்ணனை

"தங்களுக்கு இலாபம் கிடைக்குமென்றால் ராக்பெல்லர் குடும்பத்தினர் உலகின் எந்தப்பகுதியிலும் போர் மூளச் செய்யக் கூடியவர்கள்.

"தங்கள் நலனுக்கு ஒத்துவராத மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகளை அவர்கள் கவிழ்த்துவிடக் கூடியவர்களுமாவர்.

"ஒரு கோடி பேர் மாண்ட முதல் மகாயுத்தத்தில் ஒரு உயிருக்கு 45 டாலர் வீதம் 45 கோடி டாலரை ராக்பெல்லர் குடும்பம் சம்பாதித்தது; இரண்டாவது மகாயுத்தத்தில் இவர்கள் செல்வம் கணக்குக்கு அப்பாற்பட்ட கோடானுகோடியாயிற்று; சமீபத்தில் எகிப்துமீது பிரிட்டனும், பிரான்சும், இஸ்ரேலும் படையெடுத்த போதும் எண்ணெய் விலை உயர்வால் ராக்பெல்லர் குடும்பம் கொள்ளை இலாபமடித்தது.

"ஜனாதிபதி ஐசனோவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் பேருதவியாக இருந்தது ராக்பெல்லர் குடும்பமேயாகும். டல்லஸ், மெக்ளாக் போன்ற அமெரிக்கப் பெரும் புள்ளிகள் எல்லாம் இந்த ராக்பெல்லர் குடும்பத்தின் உற்பத்தியே!

"இந்த ராக்பெல்லர் சகோதரர்கள்தான் ஜப்பானுடன் சமாதான உடன்படிக்கையையும், மார்ஷல் திட்டத்தையும், சமீபத்திய ஐக் திட்டத்தையும் உருவாக்கியவர்கள்.

"மனித குலத்தின் கஷ்டங்கள், துன்பங்களாலேயே ராக்பெல்லர் சகோதரர்கள் தங்கள் பெருஞ் செல்வத்தை ஈட்டியிருக்கின்றனர்."

என்று ரஷ்ய கம்யூனிஸ்டு இளைஞர் பத்திரிகை ராக்பெல்லர் சகோதரர்களைப்பற்றி தாக்கி எழுதியிருக்கிறது.

சென்னையில் சர்க்கரை சுத்திகரிப்பு ஆலை

செக் நாடு நிர்மாணிக்கும்

பிராக், ஜூன் 11—

இந்தியாவில் மேற்கொண்டும் மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு செக்கோஸ்லோவேக்கியா முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே இந்தியாவில் ஒரு சிமெண்டு ஆலை, மின்சார நிலையம் ஏற்படுத்தவும், 2,000-க்கும் அதிகமான இரயில்வே வாகனங்கள், இயந்திரங்களையும் அந்நாடு விநியோகம் செய்திருக்கிறது.

1948 முதல் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 500 சர்க்கரை சுத்திகரிப்பு ஆலைகளை ஏற்படுத்த செக்கோஸ்லோவேக்கியா திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் டில்லி அருகே பாளிபட்டில் ஏற்கனவே ஒரு ஆலை நிறுவப்பட்டுள்ளது. இங்கு 1,000 முதல் 1,200 டன் சர்க்கரை சுத்தப்படுத்தப்படுகிறது.

மேலும் சென்னை, ஒரிசா, பஞ்சாப் ஆகிய பகுதிகளில் மூன்று ஆலைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாம். இந்த ஆலைகளின் நிர்மாண வேலை துவங்கிவிட்டதாம்.

கோயில் நிலங்கள்

கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யுமாறு யோசனை

கோயில் நிர்வாக அதிகாரிகள் 112 பேர்களுக்கு அறநிலைய அமைச்சர் நற்சான்று இதழ் வழங்கியுள்ளார்.

'கோயில்களில் நடைபெறும் மதச் சடங்குகளைப் பாதுகாப்பதில் பயிற்சி பெற்றவர்கள் அக்கறை காட்டவேண்டும்' என்று கூறி, 'கோயில் நிலங்களை கூட்டுறவு முறையில் சாகுபடிக்கு மாற்றலாம்' என்று யோசனையும் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.2 லட்சம் செலவில் 62 கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாம்.

சென்னை, ஜூன் 11—

பரம்பிக்குளம்—ஆலியூர் திட்டத்தைப் பரிசீலனை செய்ய நிர்வாக எஞ்சினீயரும், மற்றும் நான்கு அலுவலர்களும் வேலை துவக்கியுள்ளனராம். அவர்கள் அடர்ந்த காடுகளில் செல்ல வேண்டியிருப்பதாலும், அங்கு யானை, புலி, காட்டு எருமை முதலிய வன விலங்குகள் ஏராளமாயுள்ளதாலும் தற்காப்புக்காக அவர்களுக்குத் துப்பாக்கிகளைக் கொடுக்க அரசாங்கம் அனுமதித்துள்ளதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

உலகத்தை ஊடுருவிச் செல்ல

மனிதனால் இயலும்?

அதற்கான காலம் விரைகிறதாம்

மாஸ்கோ, ஜூன் 11—

ரஷ்யா தயாரித்துள்ள செயற்கைக் கிரகத்தைப்பற்றி ரஷ்ய வார இதழ் ஒன்று விவரங்கள் தந்துள்ளன.

இது ஒரு சிறு நட்சத்திரம் போன்றதாக இருக்குமாம்; நாள்தோறும் பூமியை 16 முறை சுற்றிவரக் கூடுமாம்; ஒவ்வொரு முறையும் பூமியைச் சுற்றிவர சுமார் 90 நிமிடங்கள் பிடிக்குமா?

பல ராக்கெட்டுகளை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து ஆகாயத்தில் அனுப்பப்படுமாம். குறிப்பிட்ட உயரம்போனவுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள செயற்கைக் கிரகம் பிரிந்து தானாகப் பூமியைச் சுற்ற ஆரம்பிக்குமாம்.

சூரிய உதயத்திற்கு முன்னரும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் இந்தக் கிரகம் காணப்படுமாம்.

மனிதன் உலகத்தை ஊடுருவிச் செல்லும் காலம் வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகுமாம்.

தமிழ் நாட்டில் மின்சார வசதி

சர்க்கார் தரும் தகவல்

சென்னை, ஜூன் 11—

தமிழ் நாட்டில் 1957 எப்ரல் மாதத்தில் 64 கிராமங்களுக்கு மின்சார விநியோக வசதி செய்யப்பட்டுள்ளதாம்.

பெரியாறு நீர் மின்சார அமைப்பு வேலைகள் மிகத் துரிதமாய் நடைபெறுகின்றனவென்றும், எப்ரலில், நாள்தோறும் சராசரி 5,400 பேர் வேலை செய்தனரென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குந்தா நீர் மின்சார திட்டத்தில் 'எமரால்ட்' 'அவலாஞ்சி' அணைக்கட்டுகளுக்குக் கடைக்கால் போடுவதற்கு மண் தோண்டும் வேலை நடைபெற்றதென்றும், மேல் பவானி அணைக்கட்டுக்கான இடம் பரிசீலனையிலிருக்கிறதென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னை மின்சார இயந்திர விஸ்தரிப்புத் திட்டம் வேகமாக நடைபெற்றதென்றும், எப்ரலில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 10,28,81,000 யூனிட்டுகளென்றும், இம்மாதத்தில் 4,045 புது மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டனவென்றும், அதில் விவசாயத்துக்கு 1321—வீடுகளுக்கு 2531—கைத்தொழில்களுக்கு 108 — தெரு விளக்குகளுக்கு 85 என்ற விகிதத்தில் விநியோகிக்கப்பட்டதென்றும் அரசாங்கச் செய்தித் துறை அறிவிக்கிறது.

கேரள சர்க்காரின் வரி விதிப்புகள்

ஏழை மக்களைப் பாதிக்குமாம்

காங்கிரசாரின் பேச்சு

திருவனந்தபுரம், ஜூன் 10—

கேரள சர்க்கார் தாக்கல் செய்த வரவு - செலவுத் திட்டத்தை இன்று சட்டசபையில் எதிர்க் கட்சியினர் பலரும் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான பி. பி. உம்மர் கோயா பேசுகையில், வரவு - செலவுத் திட்ட விபரங்கள் முன்கூட்டியே வெளியானதற்கு நிதி மந்திரி தமது பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்றும், இந்தச் சம்பவம் சபையின் கௌரவத்திற்கு ஊறு தேடி விட்டது என்றும் கூறி விட்டு மாநில சர்க்காரின் வரவு-செலவுத் திட்டம், மத்திய சர்க்காரின் திட்டங்களைக் காப்பியடித்திருப்பதுபோல இருப்பதாகவும், இப்போது ஆளும் கட்சியாகியுள்ள கம்யூனிஸ்டு கட்சி அந்த நாட்களில் விற்பனை வரியை ஒழுக்கக் கேடான வரியென வர்ணித்திருப்பதாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள வரி விதிப்புகள் பெரும்பாலும் ஏழை எளிய மக்களையே பாதிக்கும் என்றும் கூறினர் எனத் தெரிகிறது.

'பழைய புராணம்' மீண்டும் ஆரம்பம்?

அரிசியுடன் கோதுமையும் வாங்க வேண்டியிருக்கும்

புதுடெல்லி, ஜூன் 10—

'அரிசி வேண்டுமானால் கோதுமையையும் வாங்கிக்கொள்ளுங்கள்'—என்று நியாய விலைக் கடைகளில் கூறப்படும் காலம் வருகிறதாம்!

மத்திய அரசாங்க உணவு—விவசாய இலாகா இதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாம்.

'நாட்டில் உணவு நெருக்கடி நிலவுகிறது — பஞ்சகாலம் இந்தியாவை நோக்கிவருகிறது — பற்றுக்குறை நிலவுகிறதென்று மாநிலங்கள் எடுத்துரைத்ததற்கு, மத்திய அரசாங்கம், 'போதிய உணவுப் பொருள் கைவசமிருக்கிறது என்று கூறிவந்ததெல்லாம் 'வெறும் சரடு' என்பது புலனாகிவிட்டது.

மத்திய அரசாங்கத்திடம் அரிசி கையிருப்பு குறைவாக உள்ளதாலேயே இந்தப் புதிய நடவடிக்கையை மேற்கொள்ளுவது பற்றி யோசித்துவருவதாகக் கூறப்பட்டிருக்கிறது!

வெளிநாடுகளில்கூட, இந்தியாவுக்குத் தேவையான அளவிற்கு அரிசி கிடைக்கவில்லையாம்!

1956-ம் ஆண்டில் 8 இலட்சம் டன் அரிசி விடுவிக்கப்பட்டதாம். 1957-ல் 7 இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாம். இதில் 50,000 முதல் 1 இலட்சம் டன் வரை சேமிப்பில் இருக்க வேண்டுமாம்! மீதிதான் மாநிலங்களுக்கு விநியோகிக்கப்படுமாம்!

சென்னை சட்டசபை

27-ந் தேதி ஆரம்பமாகும்

சென்னை, ஜூன் 10—

சென்னை சட்டசபையின் வரவு-செலவுத் திட்டக் கூட்டம் ஜூன் 27-ந்தேதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

29-ந் தேதியன்று நிதி அமைச்சர் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்.

27, 28-ந் தேதிகளில் சட்டசபை சில சர்க்கார் மசோதாக்களையும், பிரரேபணைகளையும் பரிசீலனை செய்யும்.

சட்டசபையின் இக்கூட்டம் ஒரு மாதம் வரையில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

க. அன்பழகன், எம்.ஏ., எம்.எல்.ஏ. சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்ட விவரங்கள்

★

கபிலர்மலை :

20—5—57 மாலை 6 மணிக்கு, சேலம் மாவட்டம், பாண்டமங்கலம் வட்டத்தில் கபிலர்மலை தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா நடைபெற்றது. கழகப் பணிமனை வாயிலில், தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகக் கொடியை உயர்த்தி வைத்தார். அடுத்து நிகழ்ந்த பொதுக்கூட்டத்திற்கு தோழர் கு. பழனியப்பன் தலைமை வகித்தார். முதலில் தோழர்கள் பொத்தனூர் சிவப்பிரகாசம், புலவர் - புதுமைவாணன் ஆகியோர் கழகத்தின் இலட்சியத்தை விளக்கிப் பேசினார்.

அடுத்து, க. அன்பழகன் அவர்கள் கழகம் இன்று மேற்கொண்டுள்ள அரசியல் பணியையும் அதன் நற்பலனையும் விளக்கி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ஆனங்கூர் :

இரவு 9 மணியளவில், பாண்டமங்கலம் வட்டம் ஆனங்கூரில் கழகத் துவக்க விழா தோழர் சி. வேலப்பன் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது. ஏராளமான பெரியோர்களும், தாய்மார்களும் கூடியிருந்தனர். தலைவரை தோழர்கள் அர்த்தநாரி, இரா. வில்வநாதன் ஆகியோர் முன்மொழிந்து வழிமொழிந்தனர். தோழர்கள் பொத்தனூர் சிவப்பிரகாசம், புதுமைவாணன் ஆகியோர் பேசியபின், அன்பழகன் அவர்கள் கழக இலட்சியத்தை விளக்கிப் பேசினர்.

ஊரக்கரை :

21—5—57 இரவு 7 மணியளவில் தாத்தையங்கார்பேட்டை வட்டம் ஊரக்கரையில் தி. மு. க கிளை ஆண்டு விழா நடைபெற்றது. கிராம மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தனர் தோழர் முத்துக்கருப்பன் தலைமை வகித்தார். தோழர்கள் இரா. சண்முகம், சிவப்பிரகாசம், புலவர் புதுமைவாணன் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் தேர்தலுக்குப்பின் விளைந்துள்ள அரசியல் நிலைமை விளக்கிப் பேசினர். அன்பழகன் அவர்களுக்கு மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை கிளைக் கழகத்தினர் கைத்தறி ஆடை அணிவித்துப் பாராட்டினர். செயலாளர் ப. மாணிக்கம் நன்றி கூறினர்.

சின்னுளப்பட்டி :

22—5—57 மாலை 5 மணியளவில் கீழக்கோட்டையில் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் திறப்பு விழா நிகழ்ந்தது. தோழர் க. அன்பழகன் அவர்கள் கே. வி. கே. சாமி படிப்பகத்தையும், அவரது உருவப் படத்தையும் திறந்துவைத்து சாமியின் தொண்டினைப் பாராட்டி உரையாற்றினர். ஊரெங்கும் தோழர் அன்பழகன் கொடியேற்றுவித்தார். திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் படிப்பகத்தில் கொடியேற்றுவித்தார்.

மாலை 6-30 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் சு. துவாரகதாஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. சண்முகம், க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஊர்வலம் செல்லுங்கால் அன்பழகன் அவர்கள் பல இடங்களில் கொடியேற்றுவித்தார். பல மன்றங்கள் சார்பில் பேராசிரியருக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

நத்தம் :

23—5—57ல் நத்தம் (மதுரை மாவட்டம்) தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். எம். மீரான் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சமதர்மம், கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர். பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் 'இன்றைய அரசியல் நிலை,' எனும் பொருள் குறித்துப் பேசினர்.

பல கழகங்களின் சார்பில் தோழர் அன்பழகன் அவர்களுக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வத்தலக்குண்டு :

24—5—57 மாலை 5 மணியளவில், செக்காபட்டி தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் கழகப் பணிமனையையும், அண்ணா அவர்கள் படத்தையும் திறந்துவைத்தார். கழகக் கொடியேற்றுவித்து அரியதோர் உரையாற்றினர். நடைபெற்ற கூட்டத்திற்குத் தோழர் கே. எஸ். சந்தானம் தலைமை வகித்தார். டி. ஏ. சீனுவாசன் நாட்டுப் பண் பாடினர்.

இரவு 7 மணியளவில் வத்தலக்குண்டு தி. மு. க. மாணவர் கிளை சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் அன்பழகன் அவர்களது வெற்றியைப் பாராட்டியும், புது வரிகளைக் கண்டித்தும் பல தோழர்கள் பேசியபின்—தோழர் அன்பழகன் அவர்கள் கழக இலட்சியத்தையும் தோழர்கள் கடமையையும் விளக்கி விரிவாகப் பேசினர்.

திருமங்கலம் :

25—5—57 மாலை 6-30 மணியளவில், இவ்வூர் செஞ்செழியன் மன்ற 3-ம் ஆண்டு விழா காந்தி திடலில் தோழர் வி. எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பேரையூர் அனீபா, பிச்சை, இராசாக், மதுரை-முத்து ஆகியோர் பேசினர். பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் 'மே தினமும், தி. மு. கழகமும்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றினர். பல மன்றங்கள் சார்பில் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அருப்புக்கோட்டை :

26—5—57 மாலை 6 மணிக்கு. இவ்வூர் சைவபானு க்ஷத்திரிய உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழா, பள்ளி அரங்கில் திரு. க. அ. பு. இராஜதுரை, தலைமையில் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் அவர்கள் 'மொழியும் வழியும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

வேற்று மொழிக் கலப்பால் தமிழ் மொழிக்கு ஏற்படும் ஊறுகளையும், இந்தி மொழியால் ஏற்படும் தீங்கினையும் விளக்கிப் பேசினர். 'தமிழ் நாடு' என்று இன்னும் சென்னை மாநிலம் அழைக்கப்படாததை தோழர் க. அன்பழகன் அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்.

திரு. பழ. கனகராசன் ஆண்டறிக்கை வாசித்தார். தலைவர் பரிசுகளை வழங்கினர். மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

26—5—57 இரவு 7 மணிக்கு. இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் க. அன்பழகன் அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. தியாகராய வாலிபர் சங்க முன்னிலையில் திரு. சிவசண்முகசுந்தரனார் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் க. அன்பழகன் அவர்களுக்குப் பல தி. மு. கழகக் கிளைகள் சார்பில் வரவேற்பு இதழ்களும், கைத்தறி ஆடைகளும் அளிக்கப்பட்டன. தோழர் க. அன்பழகன் அவர்கள் 'தற்கால அரசியல் நிலை'பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களும் பேசினர்.

புதுவரி எதிர்ப்புத் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சாத்தன்குளம் :

28—5—57ல் சாத்தன்குளம் தி. மு. கழகச் சார்பில் புதுவரி எதிர்ப்புக் கூட்டம் தோழர் ஜான் டேவிட் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழக இலட்சியங்களை விளக்கியும் வரிக் கொடுமையின் விளைவுகளை எடுத்துக் கூறியும் தோழர்கள் சேர்மத்துரை, நல்வினைவேல், சா. அமீது ஆகியோர் பேசினர்.

பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசினர். திசையன்விளை தி. மு. க. சார்பிலும் தோழர் அன்பழகன் அவர்கட்கு கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கல்லிடைக்குறிச்சி :

29—5—57ல், கல்லிடைக்குறிச்சி தி. மு. கழகச் சார்பில் மணிமுத்தாறில் தோழர் எஸ். இரத்தினவேல் பாண்டியன், தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டியும், கழகக் கொள்கையினை விளக்கியும் தோழர்கள் எஸ். கந்தசாமி, அபிஷேக் மன்சூர், சா. அமீது ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாகத் தோழர் க. அன்பழகன் அவர்கள் திராவிடம் பிரிய வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தியும், வடநாட்டு ஆதிக்கத்தின் அநீதிகளைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பத்தமடை :

30—5—57ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் சா. அமீது, தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். சுலைமான் எஸ். இரத்தினவேல் பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாகத் தோழர் க. அன்பழகன் அவர்கள் தி. மு. கழகம் நாட்டில் பெற்றுள்ள செல்வாக்கினைத் திறம்பட விளக்கி அரியதோர் உரையாற்றினர். கூட்டத்தில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அன்பழகன் அவர்கட்கு அணிவிக்கப்பட்டன.

கடையநல்லூர் :

31—5—57 மாலை 6½ மணிக்கு இவ்வூரில 'அறிவகம்' ஒன்றைத் திறந்து வைத்து தோழர் க. அன்பழகன் சிறந்ததோர் உரையாற்றினர்.

இரவு 8 மணிக்கு தி.மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வெள்ளத்துரை, சேதுராசு, என். எஸ். சுலைமான், கதிரவன், சா. அமீது, ஆகியோர் பேசினர்.

பின்னர், க. அன்பழகன் அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். ஏராளமான கைத்தறி ஆடைகள் அன்பழகன் அவர்களுக்கு அணிவிக்கப்பட்டதோடு, வாழ்த்திதழும் அளிக்கப்பட்டது.

இலஞ்சி :

1—6—57ல், இலஞ்சியில் தி. மு. கழகத் திவக்க விழா தோழர் சா. அமீது தலைமையில் நடைபெற்றது. தலைவர் தம் முன்னுரையில் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை எடுத்தியம்பினர்.

கழகத்தைத் துவக்கி வைத்து தோழர் க. அன்பழகன், அவர்கள் கழகம் யாருக்கும் எதிரியல்லவென்றும், தி. மு. கழகத்தினால் தான் தென்னாடு விடுதலை பெற முடியும் என்றும் குறிப்பிட்டு அரியதோர் கருத்துரை வழங்கினர்.

கழகச் செயலாளராக தோழர் சிதம்பரமும், துணைச் செயலாளராகத் தோழர் செல்லப்பாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தென்காசி :

1—6—57 இரவு 8 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் வெள்ளத்துரை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. திராவிடமணி, என். எஸ். சுலைமான், க. இளங்கிரன், சா. அமீது ஆகியோர் பேசினர்.

இறுதியாகத் தோழர் க. அன்பழகன் அவர்கள் கழக வளர்ச்சி குறித்து விரிவுரையாற்றினர்.

செங்கோட்டை :

2—6—57ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் திரு. பெடரிக் சாமுவேல் தலைமையில் டவுன் ஹாலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. திராவிடமணி, என். எஸ். சுலைமான், கதிரவன், அனீபா, சா. அமீது, ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் அரியதோர் விரிவுரையாற்றினர். கைத்தறி ஆடையும், மலர்மாலைகளும் அன்பழகன் அவர்களுக்கும் அமீது அவர்களுக்கும் அணிவிக்கப்பட்டன.

சின்னமனூர் :

3—6—57ல், சின்னமனூர் இளங்கோ படிப்பக 4-ம் ஆண்டு விழா தோழர் வீ. வீரப்பன், தலைமையில் நடைபெற்றது. படிப்பகச் செயலாளர் அறிக்கை வாசித்த பின்னர் மாணவர் சுருளிவேல், தோழர் சா. அமீது ஆகியோர் பேசினர். இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள் தமிழகத்தின் அன்றைய நிலையையும்—இன்றைய நிலையையும் ஒப்பிட்டு நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

தேவகோட்டை :

4—6—57ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் வீ. வீரப்பன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராம. வெள்ளையன், இதயமணி, சா. அமீது ஆகியோர் கழகக் கருத்தினை விளக்கிப் பேசினர். பின்னர் தோழர் க. அன்பழகன் விரிவுரை யாற்றினர். பல கழகங்களின் சார்பில் அன்பழகன் அவர்களுக்கு கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அரிமழம் :

5—6—57ல், அரிமழம் தி. மு. க. சார்பில் தோழர் கே. வி. சுப்பையா, தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. வெள்ளையன், முத்துப்பேட்டை— தருமலிங்கம், சா. அமீது ஆகியோர் பேசினர். தோழர் க. அன்பழகன் அவர்கள் தேர்தலுக்குப்பின் கழகம் பெற்றுள்ள வளர்ச்சியினை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். மாணவர் கதிரவன் நன்றி கூற, சொற்பொழிவாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவித்தார். அன்பழகன் அவர்களுக்கு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது.

சென்னை 38-வது வட்ட தி. மு. க. ஆண்டுவிழாவில் இலட்சியவிளக்கம்

அண்ணா, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்

சென்னை, ஜுன் 10— சென்னை—38-வது வட்டம் தி. மு. கழக முதலாண்டு விழா. லாட்கோவிந்ததாஸ் நகரில் (மிட்லண்ட் அருகில்) மிகச் சிறப்பாக தோழர் சிட்டிபாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் அண்ணா அவர்களும், தோழர்கள் வழக்கறிஞர் பி. ஆர் கோகுலகிருட்டினன், க. அறிவழகன், முகவை-ஆர். எஸ். பாண்டியன், பொன். கு. கோதண்டபாணி முதலியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்தார்கள். அண்ணா அவர்களுக்கும் தோழர்களுக்கும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

விழாவின் தலைவர் தனது முன்னுரையில், தங்களின் தொகுதி 'திராவிடர் கோட்டை' என கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டு அதற்கான உண்மைகளை எடுத்துச் சொன்னார்.

அடுத்துப் பேசிய தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் தனக்குக் கிடைத்த 15 இடங்களை பெருவெற்றியாகக் கருதுகிறதென்றும், தேர்தலுக்குப் பிறகு துவக்கப்படும் கிளைகளின் எண்ணிக்கையைக்கண்டு இன்னும் பெருவெற்றியெனக் கருதுகிறதென்றும், மாற்றார்கள் தங்கள் நடவடிக்கைகளைப் பற்றி மக்களிடம் எந்தவகையில் எடுத்துச்சொன்னாலும் மக்கள் ஆதரவு தருவதில்லையென்றும், தி. மு. கழகம் தனது கொள்கைகளை— இலட்சியங்களை சொல்லும்போதுதான் மக்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பது நாட்டில் பேருண்மையாக விளங்கிவருகிறதென்றும், அதே போல யார் மொழி பிரச்சினையைப் பற்றி ஆராய்ந்தாலும், தமிழ்—தெலுங்கு— கன்னடம்— மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் திராவிட இனமொழிகள் தான் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் என்றும், அந்தத் திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு அண்டையிலுள்ள நாடான இலங்கையில் இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துக் காட்டி, இதற்குச் சிறந்த பரிகாரம் தேடுவதற்கு வழி 'திராவிட நாடு திராவிடருக்காக' வேண்டும் என்றும், இலங்கைப் பிரச்சினையில் நேருவின் பாராமுகத்தையும், தென்னாப்பிரிக்காவில் வாழுவோர் தன் இனம் என்றதும் அங்குள்ள மக்களுக்கு ஆதரவளிக்கும் வஞ்சனைப் போக்கையும் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டினர்.

அடுத்துப் பேசிய பொன். கு. கோதண்டபாணி அவர்கள், இன்றைக்கு இந்தியப் பேரரசு விதித்திருக்கும் வரிகளும்—வைத்திருக்கும் விஷசுரமும் ஒன்றே என்றார். மேல்நாடுகளில் மக்களின் வருவாய் அறிந்து வரி விதிப்பார்களென்றும், இங்கு அதைப்பற்றி துளிகூட எண்ணுவதில்லை என்றும் கண்டித்தார்.

பின்பேசிய தோழர் க. அறிவழகன் அவர்கள், புதிய வரிகளால் நாட்டு மக்களுக்கு ஏற்படவிருக்கும் தொல்லைகளையும், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் புள்ளி விவரங்களோடு எடுத்துக் கூறினர்.

அடுத்துப் பேசிய வழக்கறிஞர் கோகுலகிருட்டிணன் அவர்கள், விழாவுக்கு வருகை தந்த அண்ணா அவர்களை வரவேற்று, தொகுதி நிலைகளை விளக்கி சிறிதுநேரம் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், இரண்டாவது திட்டங்களில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டியதுடன், வரிகளைப் பற்றியும் அதன் கொடுமைகளையும் பேசினர்.

தலைவரின் முடிவுரைக்குப்பின், நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. (க. - கி.)

தமிழர்களுக்கு எதிராக சிங்கள வெறியர்கள் ஆர்ப்பாட்டம்

பண்டா தரும் சலுகைகளும் கூடாதாம்

கொழும்பு, ஜுன் 11—

இலங்கைவாழ் தமிழர்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையில் திரண்டெழுந்து தமிழ்ப் பகுதிகளுக்குச் சுதந்திரம் வழங்கும் ஒரு பெடரல் ஆட்சி முறை வேண்டுமென எழுப்பும் கோரிக்கையை நியாயப்படுத்தும் மற்றொரு சம்பவம் இலங்கையில் நடைபெற்றிருக்கிறது.

'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற தனது சட்டத்தில் நெடி வீசும் சிங்கள வெறியை மறைப்பதற்காகப் பிரதமர் பண்டாரநாயகா, 'தமிழ் மொழியும் நியாயமான அளவு உபயோகப்படுத்த அனுமதிக்கப்படும்' என்று பேசிவருகிறார். இந்தப் பேச்சே இலங்கையில் பெரும்பான்மையினரான சிங்களவருக்கும் அவர்களில் வெறி உணர்ச்சிக்கு ஆளாகிவிட்டவர்களுக்கும் பிடிக்காமலிருக்கிறது என்பதையும் விளக்கும் சம்பவமாகும் இது.

சிங்கள பாஷா பெரமுன; என்ற சிங்கள வெறியர்களின் கூடாரத்தைச் சேர்ந்தவர்கள், 'தமிழ் மொழிக்குச் 'சலுகை' கள் தருவதாக பண்டாரநாயகா கூறுவது பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்திற்குப் புறம்பானதாகும், என்று கூறி, பிரதமர் தமிழுக்குச் சலுகை தருவதாகக் கூறுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

பண்டாவின் பேச்சு தனி தமிழ் மாநிலத்திற்கு வழி செய்யக் கூடியது என்பதுடன், இலட்சக் கணக்கான தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதிலும் கொண்டு விடும் என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கூட்டம் ஒன்றில் கூடிப்பேசி விட்டு, பண்டாவின் இல்லத்தின் முன் சென்று ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சித்தார்களாம். அப்போது போலீசார், இவர்களைப் பண்டாவின் வீட்டுப்பக்கம் செல்லாமல் இலேசான தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தார்களாம்.

இவர்களில் சிலரான ஜெயசூரியா, மற்றும் இராஜரத்னே என்ற இருவரும் கூட்டத்தில் பேசிவிட்டு, 'தமிழருக்கு அளிக்கப்படுவதாகப் பிரதமர்கூறும் 'சலுகை'களை ரத்து செய்யும் வரையில் தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்திருக்கின்றனராம்.

இரா. தர்மலிங்கம்

டெல்லியிலிருந்து திரும்பிய திருவண்ணாமலை தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான தோழர் இரா. தர்மலிங்கம் அவர்கள் 3—6—57 அன்றிலிருந்து விஷ சுரத்தினால் (இன்புளூயன்சா) பீடிக்கப்பட்டு படுக்கையிலிருக்கிறார்; எனவே இன்னும் 15 தினங்களுக்கு எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளமுடியாதிருப்பதை இதன்மூலம் அறிவிக்கிறார்.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். பி. லிங்கம்
எண் 13, 5-வது டிரஸ்ட்
கிருஸ் ரோடு
மந்தவெளிபாக்கம், சென்னை.

வண்ணைத் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

15—6—57 மாலை 6-மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்

இரா. செழியன் M. A.
அவர்கள் தலைமையில்

அண்ணா
அவர்கள் பேசுவார்

நன்கொடை: ரூ. 1; அணா 8

—தி. மு. க. 4-வது வட்டக் கிளை, சென்னை

இந்தி மொழிக்கு ஆதிக்கம்கோரும் ஆரிய சமாஜ வெறியர்கள்

ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் வரம்பு மீறிய அட்டகாசங்கள்

சந்திகார், ஜுன் 11—

பஞ்சாப் மாநிலத்தில் இந்தி மொழிக்கு ஆதிக்கம்கோரும் வெறிகொண்ட ஆரிய சமாஜ ஆர்ப்பாட்டக்காரர்கள், நேற்றைய தினம்போல் இன்றும் சர்க்கார் அலுவலகத்தின்முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

ஆனால் இன்று அவர்களது ஆர்ப்பாட்டம் பெரும் வெறியாட்டமாக மாறியிருக்கிறது.

அலுவலகம் வந்த யாஷ் என்ற துணை மந்திரி ஒருவரை இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அலுவலகத்திற்கு உள் நுழையவும் விடாமல் திரும்பிப் போகவும் அனுமதிக்காமல் வரம்பு மீறிய அட்டகாசங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

துணை மந்திரி, தன்னைச் 'சிறைப் பிடித்த' ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பேசவே முடியவில்லையாம்! அந்த அளவுக்கு அவர்கள் கூச்சலிட்டிருக்கின்றனர்.

பின்னர் மந்திரி தனது அலுவலகத்திலிருந்து நாற்காலியையும் மேஜையையும் கொண்டு வரச் சொல்லி நடுச்சாலையிலேயே தனது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி யிருக்கிறார்.

இப்படி ஒரு மணி நேரம் அவர் ஆர்ப்பாட்டக்காரர்களின் அட்டகாசங்களுக்கு ஆளாகித் தவித்த பிறகு, அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போலீசார், ஆர்ப்பாட்டக்காரர்களைப் பிடித்து போலீஸ் லாரிகளில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை வண்டியில் ஏற்றுவது என்பது போலீசாருக்குப் பெரும்பாடாகப் போய் விட்டதாம்.

ஈ. வெ. கி சம்பத்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி. அவர்கள் விஷ சுரத்தால் பீடிக்கப்பட்டு உடல் நலங்குன்றி ஈரோட்டிலிருந்து ஓய்வு பெற்றுவருகிறார்.

உடல் நலமின்மையின் காரணமாக இன்னும்இரண்டு வார காலத்திற்கு அவர் எந்த ஒரு அழைப்பையும் ஏற்றுக் கொள்ளவோ, எந்த ஒரு அலுவலையும் கவனிக்கவோ இயலாமலிருக்கிறார் என்பது அன்பர்கள் அனைவர்க்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகீபுக்கு சிறை!

லண்டன், ஜுன் 11—

எகிப்தின் முன்னாள் மக்கள் தலைவரான நகீபுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருப்பதாகவும், இந்தக் காலம் முழுவதும் அவர் வீட்டிலேயே காவலில் இருக்கவேண்டும் என்றும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சினிமாக் காட்சிகளுக்குத் தடை நீடிக்கிறது

சென்னை, ஜுன் 11—

சென்னை மாநிலத்தில் இன்புளுயன்சா காய்ச்சல் குறைந்து வருகிறது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்; இருப்பினும், தடுப்பு நடவடிக்கைகள் மேலும் நீடிக்கப்படுகிறது.

சென்னை நகரில் உள்ள எல்லா திரைப்படக் கொட்டகைகளிலும் மாலை 7 மணிக்குப் பிறகே காட்சிகள் நடத்த வேண்டுமென்றும், காலை, பகல் காட்சிகள் நடத்தக் கூடாது என்றும் விதிக்கப்பட்ட தடையை ஜுலை முதல் தேதி வரையில் சென்னை அரசாங்கம் நீடித்திருக்கிறது.

ஒரிசா மாநிலத்தில் 'நயே' காங்கிரஸ்!

நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் நிருவனத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் காங்கிரஸ் மேலிடம் ஈடுபட்டுள்ளதல்லவா?

இதன் எதிரொலியாகவோ என்னவோ, இப்போது ஒரிசா பிரதேசக் காங்கிரஸ் குழு கலைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அதற்கு பதில் ஒரு 'அட்ஹாக்' குழு அமைக்கப்பட்டுள்ளதாம்!

கழகக் கூட்டங்கள்

★

திருப்பயர்:
14—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சே. சொக்கலிங்கம்
பேசுவோர்:
அலமேலு அப்பாதுரை
எஸ். எஸ். தென்னரசு
தி. வெ. அண்ணாதாசன்

★

இராசகிரி:
மெயின் ரோடில்
14—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்:
க. சோ. இராமச்சந்திரன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.

★

வலசு:
அழகிரி திடலில்
13—6—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
வி. கே. கலைமணி
இரா. சௌந்திரபாண்டியன்

★

சி[illegible]பளூர் (புதூர்):
([illegible]ருச்சி மாவட்டம்)
தி. மு. கழகத் துவக்கவிழா
14—6—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: ஆர். ரெங்கராசு
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
கே. மருதமுத்து
ஏ. கலியபெருமாள்
எம். சோமசுந்தரம்

சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் நினைவு மன்ற திறப்புவிழா பொதுக்கூட்டம்

13—6—57 மாலை 6-மணிக்கு வண்ணை 59, சஞ்சீவிராயன் கோயில் தெருவில் மேற்படி திறப்புவிழாவும்—பொதுக்கூட்டமும் நடைபெறும்; அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, என். ஜீவரத்தினம், தமிழழகன், வே. கபிலன் மற்றும் பலர் பேசுவர்.

சென்னை கோரிக்கை

ஓரளவேனும் நிவர்த்திக்க முயற்சிக்கிறாராம் மத்திய மந்திரி!

சென்னை, ஜுன் 12—

தொல்லைகள் ஏற்படும் நேரத்தில் சமாளிப்பதற்குப் போதுமான அளவு அரிசியை விநியோகம் செய்யுமாறு இந்தியப் பேரரசிடம் சென்னை சர்க்கார் கேட்டுள்ளதாம்.

முழு அளவில் இல்லையானாலும், கோரிக்கையில் ஒரு பகுதியையேனும் பூர்த்தி செய்ய முயற்சிப்பதாக மத்திய உணவு அமைச்சர் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

தஞ்சையிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுக்காவது உடனடியாக அரிசி விநியோகிக்குமாறு மத்திய சர்க்காரிடம் சென்னை கோரியுள்ளதாக வேறொரு செய்தி தரப்பட்டிருக்கிறது.

அரபு இராணுவக் கூட்டுக்கு ஆபத்து!

எகிப்து வெளியேறுகிறது

கெய்ரோ, ஜுன் 11—

'அரபு கூட்டு இராணுவப் பாதுகாப்புக் குழுவிலிருந்து எகிப்து அரசாங்கம் தனது பிரதிநிதியைத் திரும்ப அழைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. எல்லா அரபு நாடுகளுக்கும் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் விஷ சுரத்தினால் (இன்புளூயன்சா) பீடிக்கப்பட்டு படுக்கையிலிருக்கிறார். இத்திங்களில் அவர் ஒப்புக்கொண்ட நாடகங்களையும்—மற்ற நிகழ்ச்சிகளையும் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்ற ஆண்டுவிழா

14—6—57 அன்று மேற்படி மன்ற 4-வது ஆண்டுவிழா, திருப்பரங்குன்றத்தில் மேற்படி மன்றத் திற்குமுன் தோழர் பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணி முத்து, எம்.எல்.ஏ., தோழர்கள் எம். எஸ். இராமசாமி, மதுரை எஸ். முத்து, இரா. சு. அரசுக்கண்ணன், எஸ். மணிமொழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தேசியக் கொடிகள்

கம்யூனிஸ்டு அமைச்சர்களின் கார்களில் இனி பறக்காதாம்!

திருவனந்தபுரம், ஜுன் 12—

கேரள கம்யூனிஸ்டு அமைச்சர்களின் கார்களில் இனி இந்திய தேசியக் கொடிகள் பறக்காதாம்!

இந்த யோசனைக்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் தந்துள்ளதாகத் தெரிகிறது.

அமைச்சர்களின் 'டபேதார்கள்' ஒரே மாதிரியான உடை (யூனிபாரம்) அணிவதும் கைவிடப்படுமாம்.

அமைச்சர்களின் சுற்றுப்பயணத்தின்போது விரிவான அளவில் பாதுகாப்புகள் தரப்படமாட்டாதாம்.

வானொலி தொழிற்சாலையில் கள்வர்கள் கைவரிசை!

பூனா, ஜுன் 11—

இங்குள்ள வானொலி பாகங்களைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையிலிருந்து நேற்றிரவு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கனரக இயந்திரங்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளனவாம்.

தொழிற்சாலையிலிருந்த காவலாளியைக் கொள்ளையர்கள் கடுமையாகத் தாக்கிவிட்டே கொள்ளையடித்தனராம். இதர சாமான்கள் மீது திருடர்கள் கைகூட வைக்கவில்லையாம்!

சுதந்திரதினவிழா

இவ்வாண்டில் குடியரசுத் தலைவர் கேரளத்தில் கலந்துகொள்வார்

புதுடில்லி, ஜுன் 11—

சென்ற ஆண்டில் சென்னையில் நடைபெற்ற ஆகஸ்டு 15 சுதந்திர தின விழாவில் கலந்துகொண்ட இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர், இவ்வாண்டில், கேரளத்தில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளக்கூடுமாம்.

ஆகஸ்டு 16-ந் தேதி டில்லியில் நடைபெறும் 1857-ம் நூற்றாண்டு விழாவைத் துவக்கிவைக்க டில்லி செல்வார் என்றும் தெரியவருகிறது.

சேலம் தேர்தல் வழக்கு

சென்னை, ஜுன் 12—

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் தொடுக்கப் பட்டிருக்கும் சேலம்-1 தொகுதி தேர்தல் வழக்கு, வட ஆற்காடு மாவட்ட நீதிபதி வெங்கட்டராமன் ஐ.சி.எஸ். அவர்கள் முன்னிலையில் 19—6—57 புதன் கிழமையன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. வழக்கு விசாரணை வேலூரிலேயே நடைபெறும்.

குறிப்பு: வழக்கை மிக நல்ல முறையில் சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு நடத்த பெரும் பொருள் தேவைப்படுவதால், வழக்கு நிதியாக நன்கொடை கொடுத்துதவ முன்வரும் தோழர்கள் 'இரா. நெடுஞ்செழியன், 26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.